## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 9-8 - அறுக்கும்வினை
**(எம்பெருமான்பால் தூது போக விட்ட பறவைகள் வரக் காணாமையாலே தலைவி தலைவனது நகரான திருநாவாயில் செல்ல நினைந்தமை கூறும் முகத்தால் ஆழ்வார் தமது ப்ராப்யத்வரையைத் தெரிவித்தல்)**

3634 * அறுக்கும் வினை ஆயின * ஆகத்தவனை *
நிறுத்தும் மனத்து ஒன்றிய * சிந்தையினார்க்கு **
வெறித்தண் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
குறுக்கும் வகை உண்டு கொலோ? * கொடியேற்கே 1

3635 கொடியேரிடைக் * கோகனகத்தவள் கேள்வன் *
வடிவேல் தடங்கண் * மடப்பின்னை மணாளன் **
நெடியான் உறை சோலைகள் சூழ் * திருநாவாய் *
அடியேன் அணுகப் பெறு நாள் * எவை கொலொ? 2

3636 எவை கொல் அணுகப் பெறு நாள்? * என்று எப்போதும் *
கவையில் மனம் இன்றிக் * கண்ணீர்கள் கலுழ்வன் **
நவையில் திருநாரணன் சேர் * திருநாவாய் *
அவையுள் புகலாவது * ஓர் நாள் அறியேனே 3

3637 நாளேல் அறியேன் * எனக்குள்ளன * நானும்
மீளா அடிமைப் * பணி செய்யப் புகுந்தேன் **
நீளார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
வாளேய் தடங்கண் * மடப்பின்னை மணாளா! 4

3638 மணாளன் மலர்மங்கைக்கும் * மண்மடந்தைக்கும் *
கண்ணாளன் * உலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் **
விண்ணாளன் விரும்பி உறையும் * திருநாவாய் *
கண்ணாரக் களிக்கின்றது * இங்கு என்று கொல் கண்டே? 5

3639 கண்டே களிக்கின்றது * இங்கு என்று கொல்? கண்கள் *
தொண்டே உனக்காய் ஒழிந்தேன் * துரிசின்றி **
வண்டார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
கொண்டே உறைகின்ற * எங்கோவலர் கோவே! 6

3640 கோவாகிய * மாவலியை நிலங்கொண்டாய்! *
தேவாசுரம் செற்றவனே! * திருமாலே! **
நாவாய் உறைகின்ற * என் நாரண நம்பீ! *
ஆவா! அடியான் * இவன் என்று அருளாயே 7

3641 அருளாதொழிவாய் * அருள் செய்து * அடியேனைப்

பொருளாக்கி * உன் பொன்னடிக் கீழ்ப் புக வைப்பாய் **
மருளே இன்றி * உன்னை என் நெஞ்சத்து இருத்தும் *
தெருளே தரு * தென்திருநாவாய் என் தேவே! 8

3642 தேவர் முனிவர்க்கு என்றும் * காண்டற்கரியன் *
மூவர் முதல்வன் * ஒரு மூவுலகாளி **
தேவன் விரும்பி உறையும் * திருநாவாய் *
யாவர் அணுகப் பெறுவார் * இனி அந்தோ! 9

3643 அந்தோ! அணுகப் பெறு நாள் * என்று எப்போதும் *
சிந்தை கலங்கித் * திருமால்! என்று அழைப்பன் **
கொந்தார் மலர்ச் சோலைகள் சூழ் * திருநாவாய் *
வந்தே உறைகின்ற * எம்மா மணிவண்ணா! 10

3644 * வண்ணம் மணிமாட * நல்நாவாய் உள்ளானை *
திண்ணம் மதிள் * தென்குருகூர்ச் சடகோபன் **
பண்ணார் தமிழ் * ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
மண்ணாண்டு * மணம் கமழ்வர் மல்லிகையே 11

**அடிவரவு:** அறுக்கும் கொடி எவை நாள் மணாளன் கண்டே கோவாகிய
அருள் தேவர் அந்தோ வண்ணம் மல்லிகை